**இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டம் - 2016**

---

இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1673/11 ஆம் இலக்க 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டப் பிரமாணங்களின் 10.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 திட்டத்தின் குறிக்கோள்கள்**

நாணயச் சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 32 E பிரிவின் கீழ் நாணயச் சபையின் தலைவரால் 1673/11 ஆம் இலக்க 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களின் கீழ் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நிதி நிறுவனங்களின் தோல்வியிலிருந்து சிறிய வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை ஆரம்பகட்டமாக வடிவமைத்து, அதனூடாக சிறிய – வைப்பாளர் - நம்பிக்கையினை பேணுவதன் மூலம் நிதி நிறுவனங்களின் நிலைத்திருப்பினை மேம்படுத்துதலே திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல்

அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் தொழிற்பாடுகள், முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ரூபா 6,868.52 மில்லியனான வரிக்கு முந்திய மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,839.37 மில்லியன் வரிக்கு முந்திய மிகையினை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,970.85 மில்லியன் அல்லது 28.7 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட ரூபா 249 மில்லியன் அதிகரிப்புக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 2,219.85 மில்லியனால் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 நிதியத்தின் நிலைமை

திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்திலுள்ள மீதி முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 25,417.9 மில்லியன் நேரொத்த மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,839 மில்லியன் அல்லது 34.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.3.1 இனங்காணப்பட்ட நட்டம்

------------------------------------

ரூபா 144,251,239 தொகையொன்று பெறுமதிக்குறைவு நட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய, முதன்மை வணிகரால் உடன்படிக்கையினை முறித்துக் கொண்டமை காரணமாக, 2016 மார்ச் 31 இல் முதிர்வடைவதற்கிருந்த மறு கொள்வனவு முதலீட்டின் (திறைசேரி முறிகள்) மீதான முதலீடு தொடர்பில் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பெறுமதிக்குறைவு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மோசடியான விதத்தில் முதன்மை வணிகரால் திட்டத்திற்கு தெரியப்படுத்தாது மற்றொரு முதலீட்டாளருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த பிணைகள் எதுவும் திட்டத்தின் பெயரில் காணப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.